Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 424/2019**

**Deposition of PW.4 (LW.5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | ஜாதி | : | |
| த/பெ | : | சின்னத்தம்பி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | வீரபுடையான்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.02.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் விரபுடையான்பட்டியில் வசித்து விவசாயம் வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்தை அமைதி சோலை என்ற இடத்தில் நான் செய்து கொடுத்தேன். கடந்த 11 வருடத்திற்கு முன்பு நானும், பக்கத்து ஊரை சேர்ந்த இன்னாசியும் இருசக்கர வாகனத்தில் பன்றி மலைக்கு வேலைக்கு செல்லும்போது, அமைதி சோலை என்ற இடத்தில் போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதில் எங்களை கையொப்பம் செய்ய சொன்னார்கள். நாங்கள் செய்து கொடுத்தோம். பார்வைமகஜரில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2/PW4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

அமைதிசோலைக்கும், அழகுமடைக்கும் 5 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த கையொப்பத்தை எங்கு வைத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் அமைதிசோலைக்கு மேல் உள்ள பகுதியில் செய்து கொடுத்தேன். நீங்கள் எழுதாத வெள்ளை பேப்பரில் தான் கையொப்பம் செய்து கொடுத்தீர்கள் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor